<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்</u>

அசல் வழக்கு எண்.63/2022

இன்று 2025 ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 25 ம் நாள் இன்று இந்த வா.சா.1ன் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.A.வனிதா, M.S.W., L.L.B., அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பரமானந்தம் | தொழில் | : | போதகர் |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | ஆபேல் | கிராமம் | : | தொட்டிபாளையம் |
| வயது | : | 62 | தாலூக்கா | : | திருப்பூர் |
| நாள் | : | 25-09-2025 | மாவட்டம் | : | திருப்பூர் |

**<u>சாட்சி மீண்டும் முன்னிலையாகி சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

1. நான் சத்திய மங்கலத்தில் ஏ.ஜி சபை என்று சொல்வது சௌத் இந்தியன் அசெம்பிளி ஆப் காட் என்பதும் ஒன்று தான் என்றால் சரிதான். தாவாச் சொத்து எந்த ஆண்டு சீரமைப்பு செய்யப்பட்டது என்றால் கடந்த 2009ம் ஆண்டு சீரமைப்பு செய்யப்பட்டது. முழுமையான தேவாலயமாக அப்போது தான் கட்டப்பட்டது என்றால் சரிதான். சௌத் இந்தியன் அசெம்பிளி ஆப் காட் என்ற நிறுவனத்தில் இருந்து எனக்கு மாத வருமானம் எப்படி கொடுப்பார்கள் என்றால் அவர்கள் எனக்கு எதுவும் கொடுக்கவில்லை.

2. தாவா பிராதிலும், என்னுடைய முதல் விசாரணையிலும் நான் செய்யும் ஊழியத்திற்கு எனக்கு ஊதியம் பணமாகவோ, பொருளாகவோ கொடுக்கவில்லை என்று சொல்லி உள்ளேனா என்றால் இல்லை. சபைக்கு வரும் தசமபாகங்கள், காணிக்கைகள் யாருக்கு அனுப்பப்படும் என்றால் சௌத் இந்தியன் அசெம்பிளி ஆப் காட் என்ற நிறுவனத்திற்கு அனுப்புவேன். சபைக்கு வரும் தசமபாகங்கள், காணிக்கைகள் ஆகியவற்றில் 10 சதவிகிதம் ஸ்தாபனத்திற்கு அனுப்புவேன். மீதித் தொகை என்னிடம் இருக்கும் என்றால் சரிதான்.

3. தாவாச் சொத்திலுள்ள சபையின் சாவி தற்சமயம் யாரிடமுள்ளது என்றால் ஆர்.டி.ஓ.விடம் உள்ளது. தற்சமயம் அந்த சபைக்குள் யாருக்கும் வந்து போக முடியாது என்றால் சரிதான். 2022ம் ஆண்டு சபையில் இருந்து நான் வெளியேறிய பிறகு

சபைக்குள் செல்லவில்லை என்றால் சரிதான். நான் தற்போது எங்கு வசித்து வருகிறேன் என்றால் எஸ்.எ.பி. தியேட்டர் பின்புறம் முல்லை வீதியில் உள்ள தனி வீட்டில் என் மகளுடன் வசித்து வருகிறேன். நான் தாக்கல் செய்த முதல் விசாரணை வாக்குமூலத்தில் நான் தற்சமயம் குடியிருக்கும் முகவரியை சொல்லவில்லை என்றால் எனக்கு ஞாபகமில்லை.

4. தாவாச் சொத்தில் உள்ள சபையின் முகவரி என்ன என்றால் ராமையா காலனி, பங்களா ஸ்டாப், கதவு எண் 10, 3வது வீதி ஆகும். நான் நீதிமன்றத்தை ஏமாற்ற வேண்டி திருச்சபையின் முகவரியை என் இருப்பிடமாக கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. என்ன பரிகாரம் கோரி தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் என்னை நான் குடியிருந்த தாவா இடத்தில் இருந்து வெளியேற்றப்பட்டு விட்டேன். அதனால் மீண்டும் தாவா சொத்தில் குடியமர்த்தவேண்டி இந்த தாவாவை தாக்கல் செய்துள்ளேன்.

5. நான் குடியிருக்கும் இடத்திற்கும் தாவாவில் கண்டுள்ள சொத்து விவரத்துக்கும் சம்பந்தமில்லை என்றால் பிரச்சினை உள்ளவர்கள் என்னை அந்த இடத்தில் இருந்து வெளியேற்றி விட்டார்கள். நான் சொல்லி உள்ள முகவரியும். தாவாச் சொத்தின் முகவரியும் வெவ்வேறானது என்றால் என் தகப்பனாரிடம் தான் கேட்க வேண்டும். என் தந்தை Care Taker போல் அந்த இடத்தில் இருந்தார் என்றால் சரிதான். நான் பதில்உரைக்கு எதிருரை தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனக்கு ஞாபகமில்லை.

6. தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் தற்சமயம் நான் சபை நடத்தி வரும் இடம் என்றால் சரிதான். அது **பி.வா.சா.ஆ.3** (2 எண்ணிக்கை) ஆக குறியீடு செய்யப்படுகிறது. சௌத் இந்தியன் அசெம்பிளி ஆப் காட் என்ற நிறுவனத்தில் இருந்து என்னை பணி நீக்கம் செய்து விட்டதால் நான் தனியாக சபை வைத்து நடத்தி வருகிறேன் என்றால் சரிதான். அவர்கள் என்னை நீக்கம் செய்தது செல்லாது. நான் தற்போது பி.வா.சா.ஆ.3 ஆவணத்தில் உள்ள இடத்தில் சபை நடத்தி வருகிறேன் என்றால் சரிதான்.

7. பிரதிவாதிகள் நான் புதியதாக சபை ஏற்படுத்திக் கொள்ளவும் அல்லது பணி மாற்றம் செய்ய அனுமதித்தும் கூறி உள்ளார்கள் என்றால் சரிதான். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணங்கள் என்னால் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். வா.சா.ஆ.2 முதல் 4ல் கண்ட முகவரிக்கும் தாவாவில் கண்டுள்ள முகவரிக்கும்

சம்பந்தமில்லை என்றால் தாவாவில் எந்த முகவரி, எந்த சொத்து விவரம் கொடுத்துள்ளேன் என்ற விவரம் எனக்கு தெரியாது.

8. வா.சா.ஆ.6 ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ள புகார் என்னால் கொடுக்கப்படவில்லை சாம் சுந்தர் என்பவரால் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.6 க்கும் தாவா சொத்துக்கும் சம்பந்தமில்லை என்றால் சரியல்ல. தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் Renewal Form என்னால் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். அது **பி.வா.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. தாவா பிராது பத்தி 21ல் மேற்படி தேவாலயத்தின் சாவி பிரதிவாதிகளிடம் உள்ளதாக சொல்லி உள்ளேன் என்றால் சரிதான்.

9. அதன் பின்னிட்டு ஆர்.டி.ஓ, அலுவலகத்தில் நடந்த விசாரணை மற்றும் 107 பிரிவின் கீழ் நான் எந்த பிரச்சினையும் செய்ய மாட்டேன் என்று எழுதிக் கொடுத்த விவரம் பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியும். மேற்கண்ட விவரங்கள் என் முதல் விசாரணை வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். நீதிமன்றத்தை ஏமாற்றி தீர்ப்பு பெறவேண்டும் என்ற நோக்கத்தில் அந்த விவரங்களை நான் சொல்லவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.6ன் கீழ் ஏதாவது வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் சாம்சுந்தரை தான் கேட்கவேண்டும். எனக்கு தெரியாது.

10. தாவா பிராது பத்தி 22ல் திருச்சபைக்கு வரும் வருமானத்தில் 10 சதவிகித தொகையை The Tamil Nadu District Counsel of South India Assembly of God என்ற நிறுவனத்திற்கு கொடுத்து வந்த போதிலும், பிரதிவாதிகள் என் மீது பொய்யான புகார்களை சொல்லி வருவதாக சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். தாவாச் சொத்தில் உள்ள சபையானது The Tamil Nadu District Counsel of South India Assembly of God என்ற நிறுவனத்திற்கு கீழ் செயல்பட்டு வருகிறது என்றால் சரிதான்.

11. அந்த நிறுவனம் எடுக்கும் நடவடிக்கைகள் என்னை கட்டுப்படுத்தும் என்று சொன்னால் என்னை கட்டுப்படுத்தாது. The Tamil Nadu District Counsel of South India Assembly of God என்ற நிறுவனம் உலகளாவியது என்றால் சரிதான். அந்த நிறுவனத்திற்கு பல்வேறு கிளைகள் உள்ளது என்றால் சரிதான். தாவாச் சொத்தில் உள்ள சபை மேற்கூறிய நிறுவனத்திற்கு சொந்தமானது என்றால் சரிதான். The Tamil Nadu District Counsel of South India Assembly of God என்ற நிறுவனத்தில் பல படிநிலைகளில் பல பொறுப்பாளர்கள் உள்ளனர் என்றால் சரிதான். அந்த

பொறுப்பாளர்களின் நடவடிக்கைகள் மற்றவர்களை கட்டுப்படுத்தும் என்றால் நியாயமான காரியமாக இருந்தால் கட்டுப்படவேண்டும்.

12. 1 முதல் 5 பிரதிவாதிகள் The Tamil Nadu District Counsel of South India Assembly of God என்ற நிறுவனத்தின் பொறுப்பாளர்கள் என்று தாவா பிராதில் சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். பொறுப்பாளர்களுக்கு கட்டுப்படாமல் தாவாச் சொத்தை அபகரிக்க வேண்டி தாவா தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் தனியாக சபை ஆரம்பித்து பிரசங்கம் செய்து வருகிறேன் என்றால் சரிதான். தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் புத்தகம் நான் தற்போது நடத்தி வரும் சபைக்காக போடப்பட்டது என்றால் சரிதான். அந்த புத்தகம் **பி.வா.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

13. பி.வா.சா.ஆ.5 ஆவணத்தில் உள்ள வாழ்த்து மடல் என்னால் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். கடந்த 1948ம் ஆண்டே இந்த திருச்சபை உருவாக்கப்பட்டதாக பி.வா.சா.ஆ.5ல் சொல்லப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. The Tamil Nadu District Counsel of South India Assembly of God என்ற நிறுவனத்தின் திருப்பூர் மாவட்டத்திற்கு மண்டல தலைமை போதகராக நியமிக்கப்பட்டேன் என்றால் சரிதான். திருப்பூர் மாவட்டத்தில் உள்ள மற்ற எ.ஜி. சபைகளில் ஏதேனும் பிரச்சினை என்றால் நீங்கள் நடவடிக்கை எடுப்பீர்களா என்றால் The Tamil Nadu District Counsel of South India Assembly of God என்ற நிறுவனம் தான் எடுக்கும்.

14. தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் எங்கள் நிறுவனத்தின் By law என்றால் சரிதான். அந்த ஆவணம் **பி.வா.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பி.வா.சா.ஆ.6ன்படி போதகர் எதுவும் தவறு செய்தால் அவர்கள் மீது The Tamil Nadu District Counsel of South India Assembly of God என்ற நிறுவனம் நடவடிக்கை எடுக்கலாம் என்ற ஷரத்து உள்ளது என்றால் சரிதான். அந்த ஷரத்துப்படி என்னை விசாரிக்கவில்லை.

15. என்னை விசாரணை செய்து தான் பணிநீக்கம் செய்தார்கள் என்றால் சரியல்ல. அதனால் தான் நான் அ.வ.எண்.29/2025 என்ற தாவா தாக்கல் செய்துள்ளேன் என்றால் என்னை சரியான முறையில் விசாரணை செய்யவில்லை என்று தாக்கல் செய்துள்ளேன். திருச்சபையில் ஒரு போதகராக இருக்கும் காரணத்தினால் எனக்கு அனுமதி அளிக்கப்பட்டிருந்தது என்றால் சரியல்ல. என்

தகப்பனார் தான் என்னை நியமித்தார். திருச்சபையில் இருந்து என்னை நீக்கம் செய்துவிட்டதால், திருச்சபையின் சொத்துக்கள் மீது நான் உரிமை கோரவோ அல்லது என்னை மீண்டும் அந்த சபையில் குடி அமர்த்த வேண்டும் என்று கேட்பதற்கோ எனக்கு எந்தவித உரிமையும், முகாந்திரமும் இல்லை என்றால் சரியல்ல. என்னை தீர விசாரித்து விட்டு அவர்கள் முடிவு எடுக்க வேண்டும்.

16. திருச்சபையில் 2022 வரை மொத்தம் எத்தனை விசுவாசிகள் இருப்பார்கள் என்றால் ஆவணங்கள் சபையில் உள்ளது அதை பார்த்து தான் என்னால் சொல்ல முடியும். தற்போது என்னிடம் காட்டப்படுவது பாஸ்டர் சுந்தர்நாத் என்பவரை நீக்கியதற்கான கடிதம் என்றால் சரிதான். அது ஸ்தாபனத்தால் செய்யப்பட்டது. அந்த கடிதம் **பி.வா.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. நான் தாவாவில் கட்சி சேர்த்துள்ள 1 முதல் 5 பிரதிவாதிகள் தான் பி.வா.சா.ஆ.7 ஆவணம் தொடர்பான நடவடிக்கை எடுத்துள்ளார்கள் என்றால் நீண்ட நாட்களாகி விட்டது எனக்கு ஞாபகமில்லை.

17. திருச்சபையானது விசுவாசிகளுக்காக உருவாக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த சபையில் போதகர்கள் வருவார்கள், போவார்கள், பணிநீக்கம் செய்யப்படுவார்கள். அதனால் நான் அந்த திருச்சபையின் சொத்துக்கள் மீது உரிமை கோர முடியாது என்றால் சரியல்ல.

குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக தாவா ஒத்தி வைக்கப்படுகிறது.

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

VANITHA

Digitally signed by VANITHA
Date: 2025.09.25 16:58:24 +1100

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.